ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா - செய்தியறிக்கை -டிசம்பர் 2012

# நேர்மைத்திறன்

ட்ரான்ஸ்பேரன்சி
இன்டர்நஷனல்
ஸ்ரீ லங்கா
நேர்மைத்திறன்மிக்க தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

No.6, 37th Lane, Queen's Road, Colombo-03
Tel: 0114369781 Fax: 0112506419
Email - tisl@tisrilanka.org
web - www.tisrilanka.org



சமூக நீதிக்கான தேசிய முன்னணியின் ஸ்தாபகர் மாதுலுவாவே ஷோபித்த தேரர், அங்குரார்ப்பண நிகழ்வில் பற்றுறுதி பிரமாணத்தை வாசிக்கின்றார்.

## ஊழலுக்கு எதிரான கூட்டமைப்புக்கு வசதியளிக்கும் டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா

**இலங்கையில் முதன் முறையாக "ஊழலுக்கு எதிரான கூட்டமைப்பு" என்ற அங்கம் டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவினால் (TISL) ஆரம்பிக்கப்பட்டு, வசதியளிக்கப்பட்டுள்ளது.**

தொழிற்சங்கங்கள், சிவில் சமூக நிறுவனங்கள், தொழில்சார் அமைப்பின் கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் என ஐம்பதிற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளை இந்த கூட்டமைப்பு உள்ளடக்கியுள்ளது.

2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற உத்தியோகப்பூர்வ அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்ட பங்குபற்றுநர்கள், எந்த வடிவிலான இலஞ்சம் அல்லது ஊழலிலும் அங்கம் வகிக்கப் போவதில்லை எனவும், அனைத்து வகையான ஊழலுக்கு எதிராகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் உறுதியளித்தனர்.

"கயமை, மோசடி, அநீதி மற்றும் கொடுங்கோன்மையினால் இந்த நாடு ஊழல் எனும் கொடும் நோயுற்று இருக்கின்றது. எங்கும் பரவியுள்ள ஊழல் மற்றும் மோசடியினால் சாதாரண மனிதர்கள் ஒடுக்கப்பட்டவர்களாகியுள்ளனர். அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்குபற்ற முடியாதவாறு பொது மக்களுக்கு தடங்கல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் வளங்களுக்கும், பொதுச் சொத்துக்களுக்குமான உரிமைத்துவத்தை பொது மக்கள் சிறிது சிறிதாக இழந்து வருகின்றனர்" என குறிப்பிட்ட அவர்கள், ஊழலுக்கு எதிராக போராடுவது என்பது, நமது அன்றாட வாழ்க்கையையும், சமூகத்தையும், நாட்டின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் என உறுதிமொழி வழங்கினர். 'எமது கண்ணியம், கௌரவம் மற்றும் பாதுகாப்பை காப்பதற்கு இதுவே ஒரேயொரு அகிம்சை வழியான முறை என்பதனை நாம் உணர்ந்து கொண்டோம்" எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அங்குரார்ப்பணத்திற்கு முன்பதாக, கூட்டமைப்பின் இலக்குகளையும், குறிக்கோள்களையும் அடையாளம் காண்பதற்காக இலங்கையின் முன்னணி தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் மத்தியில் பல்வேறு கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டதுடன், கூட்டமைப்பின் அனைத்து செயலக செயற்பாடுகளும் TISLஇனால் கையாளப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டமைப்பின் குறிக்கோள்களாவன:
- அனைத்து வகையான ஊழல், இலஞ்சம் மற்றும் மேசாடிக்கு எதிராக போராடல்.
- பொதுச் சொத்துக்களின் தவறான பயன்பாட்டை தடுத்தல்.
- தகவல் உரிமை தொடர்பான சட்டத்திற்கு ஆதரவாக போராடுதல்.
- அரச நிதி முகாமைத்துவத்தில் வெளிப்படைத் தன்மையை சட்டமயமாக்குவதற்காக பணியாற்றல்.
- நிதி விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற மேற்பார்வை குழுக்களினை வலுப்படுத்துவதற்காக பணியாற்றல்.
- குற்றம் தொடர்பில் முறைப்பாடு செய்பவர்களின் பாதுகாப்பு குறித்த சட்டமியற்றல்.

கூட்டமைப்பானது ஊழல் இடம்பெறும் சந்தர்பபங்களை விசாரணை செய்து, வெளிப்படுத்தும். அத்துடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் கோரும்.

ஊழல் தொடர்பான பொது மக்கள் விசாரணைகளுக்கு 'மக்கள் நீதிமன்றம்' உருவாக்கப்படும்.

## புதிய நிறைவேற்றுப் பணிப்பாளர்

பொதுத் துறை முகாமைத்துவத்தில் முப்பது வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட சிரேஷ்ட முகாமைத்துவ நிபுணர், எஸ். ரணுக்கே, TISLஇன் புதிய நிறைவேற்றுப் பணிப்பாளராக பொறுப்பேற்றுள்ளார்.

அமைச்சுக்கள் பலவற்றில் செயலாளராகவும், திணைக்களங்களின் தலைவராகவும் அவர் கடமை புரிந்துள்ளார். இலங்கை நிர்வாக நிறுவனத்தின் முகாமைத்துவ ஆலோசகராகவும், கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராகவும் உள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் இரண்டாம் நிலை கௌரவ பட்டத்தையும், நெதர்லாந்து – ஹேக் சமூக கற்கைகளுக்கான நிறுவனத்தில் அபிவிருத்தி கற்கைகளில் முதுமானி பட்டத்தையும், பொதுக் கொள்கை மற்றும் நிர்வாகத்தில் நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளார். ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் சிட்டி பல்கலைக்கழகத்தின், ஹன்டர் கல்லூரியில் நகரத் திட்டமிடலில் தொழில்சார் சான்றிதழையும், ஐக்கிய அமெரிக்காவின் பொஸ்டன் பல்கலைக்கழகத்தில் சுகாதார முகாமைத்துவத்தில் மேலதிக சான்றிதழையும் பெற்றுள்ளார்.

1987-88 காலப்பகுதியில் ஹபர் எச் ஹம்ப்ரி (Huber H Humphrey) புலமைப்பரிசிலையும் அவர் வென்றுள்ளார்.





# இஷட் புள்ளி படுதோல்வி குறித்த கலந்துரையாடல்

**TISLஇன் அண்மைய சம்பாஷனா நிகழ்ச்சியில், 'இஷட் புள்ளிகள் மற்றும் கல்வியில் நெருக்கடி' தொடர்பான கலந்துரையாடல் பலரது கவனத்தையும் ஈர்த்தது. பாதிக்கப்பட்ட மாணவர்களும், பெற்றோர்களும், கல்வியியலாளர்களும் மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகளும் இளைஞர்கள் மற்றும் சமூகத்திற்கான பிரச்சினையாக இஷட் புள்ளி முறையின் படுதோல்வி குறித்த விடயங்களை முன்வைத்தனர்.**

ஆரம்ப பட்டியலில் பல்கலைக்கழக அனுமதி உத்தரவாதம் செய்யப்பட்ட நிலையில் இருந்த மாணவர்கள், பின்னர் வெளிவந்த புதிய பட்டியலில் இடம்பெறவில்லை என நிபுணர்கள் குழு சுட்டிக்காட்டியது. சில காரணங்களுக்காக இந்த மாணவர்களுக்கு அனுமதி வழங்க முடியாதிருப்பின், குறித்த மாணவர்கள் தாம் விரும்பிய கற்கையை தனியார் நிறுவனங்களின் ஊடாக தொடர்வதற்கு நிதி இழப்பீடு வழங்கப்படல் வேண்டும் என அவர்கள் மேலும் வலியுறுத்தினர்.

முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர், ஏ.எம்.ஆர்.பீ. அமரக்கோன், கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் சரத் விஜேசூரிய மற்றும் ஆசிரியர்கள் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

பேராசிரியர் அசங்க திலக்கரட்ன கலந்துரையாடலின் நெறியாளராக கலந்து கொண்டார்.

# UNCAC: நாம் எங்கே உள்ளோம்?

**2012ஆம் ஆண்டு ஐ.நாவின் ஊழலுக்கு எதிரான சர்வதேச தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் (UNCAC) தேர்ச்சியை மீளாய்வு செய்வது தொடர்பான தேசிய கலந்தாய்வு செயலமர்வினை TISL நடத்தவுள்ளது.**

TISLஇனால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஞாபகார்த்த நிகழ்ச்சியின் அங்கமாக டிசம்பர் மாதம் ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக் கிழமை இந்த செயலமர்வு நடைபெறவுள்ளது. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் (SLIDA) இந்த செயலமர்வு நடைபெறவுள்ளது.

இலஞ்ச ஆணைக்குழு (CIABOC) பணிப்பாளர் நாயகம், லக்ஷ்மி ஜயவிக்ரம, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர், சந்ரா ஜயரத்ன, ஊழலுக்கு எதிரான செயற்பாட்டாளர் நிஹால் ஸ்ரீ அமரசேகர மற்றும் சட்டத்தரணி ஜே. சி. வெலியமுன ஆகியோர் குழுவில் இடம்பெறுவதுடன், TISL நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ். ரணுக்கே கலந்துரையாடலின் நெறியாளராக கலந்து கொள்வார்.

2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி ஏற்புறுதி செய்தமையைத் தொடர்ந்து சாசனத்தில் ஒரு தரப்பாக இலங்கை மாறியுள்ளது. இதன் மூலம் தமது சட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை கடந்த எட்டு வருடங்களாக இலங்கை கொண்டுள்ளது. நடைமுறைப்படுத்தலின் மீளாய்வுக்கான செயல்முறையின் மீளாய்வு சக்கரத்திற்கு அமைய, பரந்தளவிலான பங்குதாரர்கள், சிவில் சமூகங்கள் மற்றும் பொது மக்களுடனான கலந்தாய்வின் பின்னர் தயாரிக்கப்பட்ட சுய மதிப்பீட்டு அறிக்கையை 2012ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் இலங்கை சமர்ப்பித்திருக்க வேண்டும். எனினும், குறித்த மீளாய்வு தொடர்பான எந்தவொரு தகவலையும் அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை.

# தேசிய நேர்மைத்திறன் விருது விழங்கல்

**TISL இன் வருடாந்த தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கல் நிகழ்வு BMICHஇல் டிசம்பர் மாதம் ஆறாம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.**

இந்த நிகழ்வில் முன்னாள் சிரேஷ்ட நிர்வாகி தேசமான்ய பிரட்மன் வீரக்கோன் பிரதம அதிதியாகவும், TISL இன் ஸ்தாபகர் சட்டத்தரணி அரித்த விக்ரமநாயக்க கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களில் இருந்து, ஆறு பேர் இறுதி பரிந்துரைகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். விருது வழங்கல் நிகழ்வின் போது விருது பெறுபவர்கள் யார் என்பது அறிவிக்கப்படும்.

பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளர். டீ. திசாநாயக்க, Aviva NDB காப்புறுதி நிறுவனத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் / முகாமைத்துவ ஆலோசகர் தீபால் சூரியாரச்சி, முன்னாள் மாவட்டச் செயலாளர் Ms. ஜயந்த புல்முல்ல, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி எஸ்.எச்.என். ஜமீல் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ. பாலசிங்கம் ஆகியோர் நடுவர்கள் குழாமில் அங்கம் வகிக்கின்றனர்.

தொடர்ந்து வெற்றிகரமாக ஒன்பதாவது தடவையாக இந்த விருது வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. 10 வெற்றியாளர்கள் மற்றும் 5 விசேட வேட்பாளர்களை இதுவரை TISL கௌரவித்துள்ளது. அவர்களில் உற்சாகமிக்க மற்றும் அச்சமற்ற பொது அதிகாரிகள், துணிச்சல் நிறைந்த ஊடகவியலாளர்கள் மற்றும் நாணயமான தொழிற்சங்கவாதிகள் உள்ளடங்குகின்றனர்.

# இளைஞர் ஆய்வு தரவு சேகரிப்பு பூர்த்தி

**டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனலின் (TI) இளைஞர் நேர்மைத்திறன் நிகழ்ச்சியின் (YIP) முதல் படியாக, இளைஞர் ஆய்வுக்கான தரவு சேகரிப்பை டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) பூர்த்தி செய்துள்ளது. நேர்மைத்திறன் மற்றும் ஊழல் தொடர்பான இளைஞர்களின் உளப்பாங்குகள் மற்றும் அனுபவங்களை இந்த ஆய்வு அளவிடுகின்றது.**



ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்யும் செயற்பாட்டில் பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர். அடுத்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் ஆய்வின் முடிவுகளை வெளியிடுவதற்கு TISL திட்டமிட்டுள்ளது. TIஇன் இளைஞர் நேர்மைத்திறன் செயற்றிட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த முடிவுகள் வழி வகுக்கும்.

இளைஞர்களில் நேர்மைத்திறனை மேம்படுத்தல் மற்றும் ஊழலுக்கு எதிராக அவர்களை போராடுவதற்கு தகுதியானவர்களாக்குவதும், தூண்டுதல் அளிப்பதுமே இந்த செயற்றிட்டத்தின் இலக்குகளாகும். மேலதிகமாக ஊழல் விடயங்கள் தொடர்பான பொது மக்களின் விழிப்புணர்வு அதிகரிப்பதுடன், பொறுப்புடைமை சார் எதிர்பார்ப்புக்களும் நிறைவேற்றப்படும்.

முன்பதாக, TI இன் இளைஞர் நேர்மைத்திறன் செயற்றிட்டத்தின் (YIP) பிராந்திய ரீதியான ஆரம்ப நிகழ்விற்காக டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனலின் ஐந்து அங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இலங்கையில் சந்தித்தனர். இரண்டு நாட்கள் செயலமர்வைத் தொடர்ந்து எளிமையான நிகழ்வாக இது அமைந்திருந்தது.

# ‘நேர்மையின் புகலிடம்’ வலையமைப்பை உருவாக்குகின்றது

**ஊழலை ஒழிப்பதற்கும், நேர்மைத் திறனை மேம்படுத்துவதற்குமான தேவை குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதற்கு சமுதாயம் சார் நிறுவனங்களுடனான (CBO) வலையமைப்பை TISL இனால் அமைக்கப்பட்ட ‘நேர்மையின் புகலிடம்’ கட்டியெழுப்புகின்றது.**

இந்த நிகழ்ச்சியினை அங்குரார்ப்பணம் செய்யும் வகையில் நடைபெற்ற கூட்டங்களில் பொலன்னறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த CBO தலைவர்கள் பங்குபற்றினர். குருநாகலில் நடைபெற்ற கூட்டம் தேவசரண அபிவிருத்தி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டதுடன், பொலன்னறுவையில் நடைபெற்ற கூட்டம் பிரஜைகள் முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த வலையமைப்பானது “நேர்மையின் புகலிடம்” சேவை பிராந்திய சமுதாயம் சார் நிறுவனங்களுக்கு இடையில் உறவினை கட்டியெழுப்புவதன் மூலம், இலக்குக் குழுக்களை அதிகரிப்பதற்கு உதவி செய்யும். அதேவேளை, நேர்மையின் புகலிடத்திற்கான அவதானம் மற்றும் இடையீட்டிற்குத் தேவையான பகுதிகள் மற்றும் விடயங்களை அடையாளம் காண்பதற்கும் அது உதவி புரியும்.

அதேவேளை, ‘நேர்மையின் புகலிடம்” கிளையொன்று மட்டக்களப்பு நகரில் திறக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, இல, 435/65 ஏ, பூம்புகார் ஒழுங்கை, திருகோணமலை வீதியில், இந்த நிலையம் இயங்கி வருவதுடன், அலுவலகத்துடன் எளிதில் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் (065) 2055055 ஆகும்.

மேலதிக அரசாங்க அதிபர். கே. விமலநாதன் இந்த நிலையத்தினை திறந்து வைத்ததுடன், நிலையத்தின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு அரசாங்க அதிபர் பணிமனையின் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் உறுதியளித்தார். பிரதேச செயலாளர். எஸ். கிரிதரன் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உதவி ஆணையாளர். Ms. ஜி. சத்தியானந்தி ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

TISL இனை பிரதிநிதித்துவப்படுத்தி நிறைவேற்றுப் பணிப்பாளர். எஸ். ரணுக்கே, ‘நேர்மையின் புகலிடம்’ ஒருங்கிணைப்பாளர், டீ.எம். திசாநாயக்க, சட்ட அதிகாரி ஜகத் லியனாரச்சி மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பாளர். ஏ. கௌசிகான் ஆகியோர் கலந்து கொண்டனர்.








# அரசியல் குற்றப்பிரேரணை விடயத்தை கையாள்வதில் குறைபாடற்ற செயல்முறைக்கான தேவையை வலியுறுத்தும் *TISL*

பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை விசாரிக்கும் சந்தர்ப்பத்தில் நீதி எட்டப்படும் குறைபாடற்றற செயல்முறையை கையாள வேண்டியது சம்பந்தப்பட்ட அனைவரினதும் கடமையாகவும், தேசிய பொறுப்பாகவும் உள்ளது என அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சபாநாயகர் மற்றும் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) குறிப்பிட்டுள்ளது.

மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை விசாரணை செய்வதில் ஏற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் நீதியான செயல்முறையை பின்பற்றிய வேறு நாடுகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும் எனவும், சிங்கப்பூரை பின்பற்றக் கூடிய அதற்கான உதாரணமாகவும் TISL குறிப்பிட்டுள்ளது. மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணைகளை விசாரணை செய்வதற்கு ஓய்வு பெற்ற மற்றும் கடமையில் உள்ள நீதிபதிகள் உள்ளடங்கிய நீதிமன்றத்திற்கான சந்தர்ப்பத்தை சிங்கப்பூர் அரசியலமைப்பு வழங்குவதாகவும் TISL சுட்டிக் காட்டியுள்ளது.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இலங்கையின் நிறைவேற்றுத் துறை மற்றும் சட்டத் துறைக்கு இடையிலான இக்கட்டான நிலை தொடர்பில் ஊழலுக்கு எதிரான உலகளாவிய முன்னணியின் இலங்கைக்கான முகவர்களான டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெகூஷனல் ஸ்ரீலங்கா, கவனம் செலுத்தியுள்ளது. இதனை ஒரு ஆரோக்கியமற்ற அபிவிருத்தியாக உணர்வதுடன், நாட்டின் ஜனநாயகம் மற்றும் நல்லாட்சியின் மீதான தீவிரமான அச்சுறுத்தலாகவும் நாம் கருதுகின்றோம். அது மாத்திரமின்றி, மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சியின் கோட்பாடுகளை மதிக்கும் சாசனங்கள் போன்ற ஐ.நாவின் பல சாசனங்களில் இலங்கை ஒரு தரப்பாக உள்ளமையால், இந்த விடயம் நீதியாக கையாளப்படவில்லையெனின் இந்த உள்ளக விடயமானது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும்.

உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணைக்கான சந்தர்ப்பத்தை அரசியலமைப்பு சட்டம் வழங்குகின்றது என்பதனையும், இந்த அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அமையவே குறித்த அரசியல் குற்றப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது என்பதனையும் நாம் அறிவோம். பிரேரணையை முன்னெடுத்துச் செல்வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பாராளுமன்ற கட்டளைகள் மற்றும் கௌரவ சபாநாயகர் வசம் உள்ளது என்பதனையும் நாம் அறிவோம். அதன் அடிப்படையிலேயே இதுவரை கௌரவ சபாநாயகர் செயற்பட்டு வந்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட கட்டளைகளுக்கு அமைய, குற்றப் பிரேரணையானது கௌரவ சபாநாயகரினால் தெரிவு செய்யப்பட்ட குழுவினால் விசாரணை செய்யப்பட்டல் ஃ செவிமடுக்கப்படல் வேண்டும். நாம் அனைவரும் அறிந்துள்ள வகையில், தெரிவுக் குழுவானது பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. அத்துடன், குற்றப் பிரேரணையை சமர்ப்பித்தவர்களான ஆளும் கட்சி உறுப்பினர்களே இந்த தெரிவுக் குழுவில் பெரும்பான்மையாக அங்கம் வகித்துள்ளனர். வேறு சொற்களில் கூறுவதானால், முறைப்பாட்டாளர்கள் அல்லது மனுதாரர்களே, தற்போதைய கட்டளைகளின் அடிப்படையில் நீதிபதிகளாகவும் உள்ளனர். இது மிகவும் மோசமான குறைபாடாகும். தெரிவுக் குழுவின் முடிவுகள் பக்கச்சார்பற்றதாக இருப்பினும், பக்கச்சார்பானதாக, அநீதியானதாக மற்றும் இயற்கை நீதிக்கு எதிரானதாக பொருள் கொள்ளப்படலாம். நடைமுறையில் உள்ள செயற்பாட்டில் காணப்படும் குறைபாடு மற்றும் அந்த செயற்பாட்டின் அரசியல் குற்றப் பிரேரணையின் பெறுபேறு நிச்சயமாக வேறுபட்ட கருத்துடன் விளக்கப்படும். அந்த விளக்கங்கள், தற்போது சர்வதேச அரங்கில் இலங்கை எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிகளை அதிகரிக்க மற்றும் தூண்டுவதற்கு காரணமாகும். அதனால், அரசியல் குற்றப் பிரேரணையை விசாரிக்கும் சந்தர்ப்பத்தில் நீதி எட்டப்படும் குறைபாடற்ற செயல்முறையை கையாள வேண்டியது சம்பந்தப்பட்ட அனைவரினதும் கடமையாகவும், தேசிய பொறுப்பாகவும் உள்ளது என நாம் கருதுகின்றோம்.

இந்த நிலையில், மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை விசாரணை செய்வதில் ஏற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் நீதியான செயல்முறையை பின்பற்றிய வேறு நாடுகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும். மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணைகளை விசாரணை செய்வதற்கு ஓய்வு பெற்ற மற்றும் கடமையில் உள்ள நீதிபதிகள் உள்ளடங்கிய நீதிமன்றத்திற்கான சந்தர்ப்பத்தை சிங்கப்பூர் அரசியலமைப்பு வழங்குகின்றது (சிங்கப்பூர் அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 98). புதிய சட்டங்களை உருவாக்கல் அல்லது குறித்த நோக்கத்திற்கான கட்டளைகளில் திருத்தங்களை முன்னெடுப்பதன் மூலம் அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 107இன் கீழான அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடுகளிற்குள் எமது பாராளுமன்றம் அவ்வாறான செயல்முறைகளை உள்வாங்கிக் கொள்ளலாம் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

பிரதம நீதியரசர், ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு நீதி எட்டும் வகையில் மனசாட்சியுடன் செயற்படுமாறும், எம்மை அவதானித்துக் கொண்டிருக்கும் முழு உலகிற்கும் குற்றப் பிரேரணை வழக்கு விசாரணையில் ‘நீதி நிலைநாட்டப்பட்டமையை’ நிரூபித்துக் காட்டுமாறும் அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ சபாநாயகர் மற்றும் அனைத்து கட்சிகளினதும் தலைவர்களிடம் டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா வலியுறுத்துகின்றது.

# *TISL* இணையத்தளத்திற்கான அங்கீகாரம்

2012ஆம் ஆண்டுக்கான Bestweb.lk விருதுகளில் இலாப நோக்கற்ற மற்றும் கல்விப் பிரிவில் TISL இன் இணையத்தளமான www.transparency.lk வெள்ளி விருதினை வென்றுள்ளது.

இந்த விருதுகளில் TISL இணையத்தளத்திற்கு அங்கீகாரம் கிடைத்த இரண்டாவது சந்தர்ப்பமாக இது உள்ளது. 2010ஆம் ஆண்டும் TISL வெள்ளி விருதினை வென்றமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி. ஆர். பீ. ஏக்கநாயக்க தலைவராக விளங்கும் இலங்கை டொமைன் பதிவகத்தினால் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. டொமைன் பதிவாளராக பேராசிரியர் கிஹான் டயஸ் விளங்குகின்றார்.

